# TVEC செய்தி

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு யூலை 2021 ISSN 2012 - 5054

உள்ளடக்கங்கள்


- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் புதிய தலைவர்
- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் புதிய பணிப்பாளர் நாயகம்
- ஒட்டுமொத்த தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைக்கான தேசிய அபிவிருத்தி திட்டமொன்றினை தயாரிக்கும் காலப்பகுதியில் ஆணைக்குழுவின் நகர்வு...
- நிறுவக பதிவு, தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமை
- கணிப்பீட்டாளர்களின் தகவல்களை நாளதுவரையாக்கம் செய்தல்
- இலங்கையின் தொழிற்பயிற்சியானது தொழிலாளர் சந்தைக்கு பொருத்தமானதா?
- அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள், 2020


**2021 ஆம் ஆண்டு யூலை மாதமாகும் போது விநியோகிக்கப்பட்டுள்ள NVQ சான்றிதழ்களின் எண்ணிக்கை 490,202**

## மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் புதிய தலைவர்



மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் புதிய தலைவராக 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதியன்று நியமனத்தினை பெற்றுக்கொண்ட பொறியியலாளர் உடேதனி விக்கிரமசிங்க அவர்கள் கமநலசேவை மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சின் முன்னைநாள் செயலாளராவார். மேலும் அவர் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அரச பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் (தொழில்நுட்பம்) ஆக கடமையாற்றியுள்ளார். அவர் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் துறைசார் பட்டதாரியாவார் என்பதுடன் மொரட்டுவ மற்றும் மன்செஸ்டர் ஆகிய பல்கலைக்கழகங்களிலிருந்து பட்டப்பின் பட்டங்களையும் பெற்றுள்ளார்.

## மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் புதிய பணிப்பாளர் நாயகம்



மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் புதிய பணிப்பாளர் நாயகமாக கலாநிதி லலிததீர அவர்கள் 2021.04.27 ஆம் திகதியன்று கடமையினை பொறுப்பேற்றுக் கொண்டார். கலாநிதி லலிததீர அவர்கள் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி, நிர்வாகம், ஆராய்ச்சி மற்றும் திட்டங்கள் ஆகிய விடயங்களில் 25 வருடங்களிற்கும் அதிகமான அனுபவத்தினை கொண்ட ஓர் அதிகாரியாவார். விசேடமாக அவரால் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவர் ஆராய்ச்சி துறைசார் ஓர் நிபுணருமாவார்.

அவர் ஆணைக்குழுவில் பணிப்பாளர் நாயகம் பதவியிற்கான நியமனத்தினை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் தேசிய மனிதவள அபிவிருத்தி சபையில் பணிப்பாளராக கடமையாற்றியிருந்தார்.

கலாநிதி லலிததீர அவர்கள் ருகுணு பல்கலைக்கழகத்தின் பொருளியல் விஞ்ஞானம் தொடர்பான பட்டதாரியாவார் என்பதுடன் அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளியல் விஞ்ஞானம் தொடர்பான பட்டப்பின் பட்டத்தினையும் பெற்றுள்ளார். அவர் பொருளியல் விஞ்ஞானம் தொடர்பான கலாநிதி பட்டத்தினை கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிறைவுசெய்துள்ளதுடன் கலாநிதி பட்டத்தின் பொருட்டு அவர் தொழில்நுட்ப கல்வியினால் தொழிலாளர் சந்தையில் ஏற்படும் தாக்கங்கள் என்ற தலைப்பில் ஆராய்ச்சியினை மேற்கொண்டுள்ளார்.

# ஒட்டுமொத்த தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைக்கான தேசிய அபிவிருத்தி திட்டமொன்றினை தயாரிக்கும் காலப்பகுதியில் ஆணைக்குழுவின் நகர்வு...

## (TVEC is in the age Era of Compiling a National Department Plan for TVEC Sector.)

புதிய வழிமுறையினூடாக தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சிகள் தற்போது மிகவும் வலுவான நிலையி-னை அடைந்துள்ளது என்பதனை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன். புதிய தொழில் உலகத்தினை எதிர்கொள்வதற்காக காலத்திற்கேற்றவாறு தயார்செய்யப்பட்ட தேசிய அபிவிருத்தி திட்டமானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆறு தலைப்புகளின் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ளது.

1. தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்கான நுழைவு
2. பயிற்சி அபிவிருத்தி மற்றும் செல்லுபடியாக்கம்
3. தொழிலாளர் சந்தை தகவல்கள் மற்றும் பயிற்சி தொடர்பான தகவல்கள் ஆகியவற்றினை டிஜிட்டல் மயமாக்கல்
4. தொழிற்துறைசார் தொடர்புகள் மற்றும் தொழிற்படை அபிவிருத்தி
5. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி துறைசார் தரச்சான்றளிப்பு மற்றும் அங்கீகாரம்
6. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி துறைசார் பௌதிக மற்றும் நிதி வளங்கள் தொடர்பான மனிதவளத்தின் தொலைநோக்கினை முகாமைத்துவம் செய்தல்

மேலும் இத் திட்டத்தினை தயாரிப்பதற்காக கீழே தரப்பட்டுள்ள ஆதாரங்கள் உபயோகிக்கப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டிலிருந்து தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் நிறுவக வருடாந்த திட்டங்கள் இதற்கிணங்க தயாரிக்கப்படும். அவ்வாறே, இதன் அடிப்படையில் தேசிய பயிற்சி திட்டமானது வருடாந்தம் தயார்செய்யப்படும். இதுவரையில் தேசிய அபிவிருத்தி திட்டத்தின் தயாரிப்பானது நிறைவடைந்துள்ளதுடன் அது ஜனாதிபதி அவர்களின் அனுமதியினை பெற்றுக்கொள்ளும் பொருட்டு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மிக விரைவில் இதனை நீங்கள் TVEC இணையத்தளம் (www.tvec.gov.lk) ஊடாக தரவிறக்கம் செய்யக்கூடியதாக இருக்கும்.

1. “அரசின் சுபீட்சத்திற்கான நோக்கு” கொள்கை வெளியீடு
2. தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தொடர்பான தேசிய கொள்கை
3. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி சட்டமூலம் மற்றும் திருத்தம்
4. இலங்கை தேசிய தொழிற்தகைமை சட்டகம்
5. இலங்கையின் TVET துறைசார் எதிர்கால திசைகள் தொடர்பான அறிக்கை
6. இலங்கை தொடர்பான தேசிய மனிதவள மற்றும் தொழிற் கொள்கை

பிரியந்த தர்மசேன - உதவி பணிப்பாளர்
திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு



# நிறுவக பதிவு, தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ செயன்முறைகள்




## நிறுவக பதிவு

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி சட்டமூலத்திற்கு இணங்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியினை வழங்குவதற்காக ஸ்தாபிக்கப்படும் நிறுவகங்கள் மற்றும் அவற்றின் பாடநெறிகள் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) கீழ் பதிவுசெய்யப்படுதல் கட்டாயமானதாகும். தொழிற்பயிற்சியினை வழங்கும் நிறுவகங்கள் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்தல் மற்றும் பயிற்சி பாடநெறிகளை நடாத்துதல் ஆகியவை தொடர்பான வழிகாட்டல்கள் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் www.tvec.gov.lk என்ற இணையத்தளத்தில் Guidelines for registration of training institutes என்ற தலைப்பின் கீழ் வெளியீடு செய்யப்பட்டுள்ளன.

நிறுவகங்கள் தமது பயிற்சி வழங்கலை ஆரம்பிப்பதற்கு முன்னர் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அனுமதியினை பெற்றுக்கொள்வதற்கான முறைமையொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இங்கு பாடத்திட்டம், பயிற்சி வழங்கல் திட்டம், பயிற்றுநர்களின் தகைமைகள், உள்கட்டுமான வசதிகள், பாடநெறி தொடர்பாக அவசியமான உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள், நிதியாற்றல் மற்றும் கணிப்பீட்டினை நடாத்துவதற்கு அவசியமான வளங்கள் போன்றன மேற்பார்வை செய்யப்பட்டு Pre-Registration நிலைமைக்கான பதிவு அனுமதியானது வழங்கப்படுவதுடன் அது 06 மாத காலப்பகுதிக்கு செல்லுபடியாக காணப்படும். Pre-Registration இனை பெற்றுக்கொண்டு 06 மாத காலப்பகுதியினுள் பாடநெறி-யினை ஆரம்பித்து பதிவுசெய்தலிற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

## பாடநெறிக்கான தராதர அங்கீகாரம்



பாடநெறி தராதர அங்கீகாரம் (Accreditation) என்பது இலங்கையின் தேசிய தொழிற்தகைமை சட்டகத்திற்கு (NVQSL) அமைவாக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் பாடநெறி ஒன்றினை முறையாக அங்கீகரித்தலாகும். இங்கு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட தேசிய தொழிற்தகைமை சட்டகத்திற்கு இணங்க நடாத்தப்படும் பாடநெறிக-ளின் தரங்களை உறுதி செய்தல் இடம்பெறுகின்றது. தேசிய தேர்ச்சி நியமங்கள் (NCS) இதற்கான பிரதான ஆவணமாகும். தேர்ச்சி நியமங்களில் காட்டப்பட்டுள்ள தேர்ச்சிகள், தேர்ச்சி அடிப்படையிலான முறைமையின் கீழ் பயிற்சி அளித்தல் மேற்கொள்ளப்படுகின்றது என்பதற்கான அனுமதியளிப்பிற்கு பயன்படுத்தப்படுகின்றது. தேச-ிய தேர்ச்சி நியமங்களிற்கு இணங்க நடாத்தப்படும் பதிவுசெய்யப்பட்ட பாடநெறிகளின் பொருட்டு தராதர அங்கீகரிப்பிற்கான கோரிக்கையினை மேற்கொள்ளமுடியும். இவ்வாறு தராதர அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படும் பாடநெறிகள் தொடர்பான இறுதி கணிப்பீடு TVEC நிறுவகத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் தகைமை பெறுபவர்கள் தொடர்பாக NVQ சான்றிதழ்கள் விருதளிக்கப்படுகின்றன.




## தர முகாமைத்துவ முறைமை

TVEC இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள நிறுவகங்களினால் மேற்கொள்ளப்படும் பாடநெறிகளின் தரத்தினை மேம்படுத்துவதே தர முகாமைத்துவ முறைமையினை (QMS) ஸ்தாபிப்பதன் பிரதான நோக்கமாகும். இங்கு ISO 9001(2008) மற்றும் SLS IWA 2 (2007) ஆகிய நியமங்களை அடிப்படையாகக் கொண்டு தர சோதனை மேற்கொள்ளப்படுகின்றது. வினைத்திறன் மிக்க முறையில் சேவை வழங்குநருடன் தொடர்புகளை பேணுதல், நிதி திட்டமிடல் மற்றும் நிர்வாகம், நம்பிக்கையான அறிக்கையினை பேணுதல் மற்றும் வாடிக்கையாளர் திருப்திக்கு காரணமான ஆவணங்களை முகாமைத்துவம் செய்தல் போன்றன இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. NVQ 5 மற்றும் NVQ 6 போன்ற டிப்ளோமா மட்ட பாடநெறிகளை நடாத்துவதாயின் நிறுவகத்தினுள் தர முகாமைத்துவ முறைமையினை (QMS) ஸ்தாபிப்பது அவசியமாகும். தற்போது 193 நிறுவகங்களில் இத் தர முகாமைத்துவ முறைமையானது (QMS) உயிர்ப்பாக நடைமுறையிலுள்ளது.



## தர மேம்படுத்தல் முறைமை (QIS)

இதற்கு மேலதிகமாக, துறைசார் அனுபவம் மற்றும் பாடங்களின் அடிப்படையில் தர கலாச்சாரத்தினை மேம்படுத்துவதற்காக தர மேம்பாட்டு முறைமை (QIS) என்ற பெயரிலான புதிய அறிமுகம் ஒன்று 2018 ஆம் ஆண்டு TVEC இனால் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி ஆகியவற்றினால் நிதி அளிக்கப்படும் திறன்கள் துறைசார் அபிவிருத்தி திட்டத்தின் நிதி மற்றும் தொழில்நுட்ப பங்களிப்புடன் அறிமுகம் செய்யப்பட்டது. இங்கு ஆகக் குறைந்த தரம் மற்றும் தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல் போன்றன நிறுவகங்களை மூன்று நட்சத்திர வகுப்புகளாக வகைப்படுத்துவதற்கு வழிவகுக்கின்றது. மேலதிக நடவடிக்கைகளை சேர்ப்பதனால் 4 நட்சத்திரங்கள் மற்றும் 5 நட்சத்திரங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. அதற்காக நியமிக்கப்பட்ட தேசிய ஒருங்கிணைப்பு குழுவின் (NCC) பரிந்துரைத்தலிற்கு இணங்க ஒழுங்கமைக்கும் நிறுவகமான மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) இன் மூலம் உரிய சான்றிதழானது வழங்கப்படுகின்றது. இங்கு நிறுவக மதிப்பீட்டு நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீட்டாளர்களிற்கு பயிற்சி அளித்தல் ஆகியன TVEC நிறுவகத்தின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. QIS இன் பிரதான நோக்கமாவது அனைவருக்கும் சிறந்த, தரமான மற்றும் மகிழ்ச்சிகரமான வேலை சூழலினை உருவாக்கலாகும். இதுவரையில் 228 நிறுவகங்களில் QIS ஆனது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

கயந்தி மாசகோரால - உதவி பணிப்பாளர்
நிறுவக பதிவு, தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு



# கணிப்பீட்டளார்களின் தகவல்களை நாளதுவரையாக்கல்

2004 ஆம் ஆண்டிலிருந்து எமது ஆணைக்குழுவினால் பல்வேறு துறைகள் தொடர்பாக கணிப்பீட்டாளர்களிற்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு கணிப்பீட்டு தரவுத்தளமானது பேணப்பட்டு வருகின்றது.

அத் தரவுத்தளத்தினை உபயோகித்து நாட்டில் NVQ பாடநெறிகளை நடாத்திவரும் அரச மற்றும் தனியார் துறை நிறுவகங்களை சேர்ந்த மாணவர்களின் கணிப்பீட்டின் பொருட்டு கணிப்பீட்டாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஆனால் எமது கணிப்பீட்டாளர்கள் பல்வேறுபட்ட நிறுவகங்களிலும் மற்றும் பல்வேறு பிரதேசங்களிலும் சேவையில் ஈடுபடுவதனால் அவர்கள் தொடர்பான தகவல்கள் காலத்திற்கு காலம் வேறுபடுகின்றன. அவர்கள் பற்றிய தகவல்கள் காலத்திற்கு காலம் வேறுபடுவதனால் அனைவருக்கும் சமமான கணிப்பீட்டு சந்தர்ப்பங்களை வழங்கும் பொருட்டு அவர்களை தொடர்பு கொள்ளுதல் கடினமாகின்றது. எம்மால் இந் நிலைமையினை தவிர்த்துக்கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டில் கணிப்பீட்டாளர்கள் தொடர்பான தரவுகள் நாளதுவரையாக்கம் செய்யப்பட்டதுடன் அதன் பெறுபேறானது 50% ஆக காணப்பட்டது. அதன் பின்னர் கணிப்பீட்டு பிரிவின் மூலம் இந் நிலைமையினை மேலும் தவிர்த்துக்கொள்ளும் நோக்கில் கணிப்பீட்டாளர்களின் தகவல்களை கணனி முறைமையினூடாக நாளதுவரையாக்கம் செய்யும் செயன்முறையொன்று 2020 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டில் இருந்து அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க, கணிப்பீட்டு தரவுத்தளத்திலுள்ள அனைத்து கணிப்பீட்டாளர்களிற்கும் தமது தரவுகளை நாளதுவரையாக்கம் செய்வதற்கான சந்தர்ப்பமொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இச் செயன்முறையின் அறிமுகத்துடன் கணிப்பீட்டு நியமனங்களிற்கான அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்டு பயிற்சி நிறுவகங்களிற்கு கணனி மயப்படுத்தப்பட்ட முறைமை ஊடாக தாமாகவே கணிப்பீட்டாளர்களை நியமனம் செய்யும் வசதியானது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம், மிகவும் முறைசார் மற்றும் வினைத்திறன் மிக்கதாக கணிப்பீடுகளை நடாத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி கணிப்பீடுகளின் தரங்கள் பாதுகாத்து நாட்டிலுள்ள இளைஞர் மற்றும் யுவதிகளிற்கு செயற்றிறன் மிக்க சேவையினை வழங்குதல் எமது ஆணைக்குழுவின் ஒரேயொரு நோக்கமாகும்.

பீ.பீ.பீ. நாணயக்கார - பிரதி பணிப்பாளர்
தர நிர்ணயம் மற்றும் கணிப்பீட்டு
ஒழுங்கமைப்பு பிரிவு

# இலங்கையின் தொழிற்பயிற்சியானது தொழிலாளர் சந்தைக்கு பொருத்தமானதா?

தற்போது இலங்கையின் தொழிற்பயிற்சி முறைமையானது ஓர் விசேட கட்டத்தினை எட்டியுள்ளது. தேசிய தொழிற் தகைமை முறைமையானது அறிமுகம் செய்யப்பட்டு திறன்களிற்கு ஏற்ப உயர் மட்டம் வரையில் பயணம் செய்வதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. இம் முறைமையில் மட்டம் 01 இலிருந்து மட்டம் 07 வரையில் மட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க, 1 இலிருந்து 4 வரையில் சான்றிதழ் மட்டமாகவும் மட்டம் 5 டிப்ளோமா மட்டமாகவும் மட்டம் 6 உயர் டிப்ளோமா மட்டமாகவும் மற்றும் மட்டம் 7 பட்டதாரி மட்டமாகவும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.




இம் முறைமையில், தொழிற்துறைகளில் நிலவும் அடையாளங்காணப்பட்ட தொழில்களிற்குரிய தேர்ச்சி நியமங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் எந்தவொரு நபரிற்கும் கல்வித் தகைமைகள் இல்லாமல் சான்றிதழ் மட்டத்திலிருந்து பட்டதாரி மட்டம் வரையில் பயணிக்கமுடியும்.

இலங்கையில் தொழிற்பயிற்சியானது பிரதானமாக இரண்டு முறைகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

1. மத்திய நிலையத்தினை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி
2. தொழிற்துறை அடிப்படையிலான பயிலுநர் பயிற்சி

இம் முறைகளில் வருடாந்தம் 250,000 வரையிலான திறன் கைவினைஞர்கள் தொழிற்பயிற்சி தொடர்பாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் வருடாந்தம் 175,000 வரையில் பயிற்சிகளை நிறைவுசெய்கின்றனர்.

பெரும் எண்ணிக்கையான கைவினைஞர்கள் தொழிற்பயிற்சியினை வருடாந்தம் நிறைவுசெய்து சமூகமயமாகின்ற போதிலும், இலங்கையின் தொழிற்பயிற்சியினை ஒட்டுமொத்தமாக கருத்திற்கொள்ளும் போது பயிற்சியினை நிறைவுசெய்துள்ளோரின் எண்ணிக்கையில் பெரும் எண்ணிக்கையானோர் தொழில்வாய்ப்புக்களின்றி உள்ளமையினை பல அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இவ் எண்ணிக்கை தொடர்பாக மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் அறிக்கை, உலக வங்கியின் அறிக்கை மற்றும் பல்வேறு ஆய்வுகள் போன்றவற்றில் வேறுபட்ட சதவீதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆனால், எமது தொழிற்பயிற்சி முறைமையின் கீழ் பயிற்சிகளை நிறைவுசெய்துள்ள கைவினைஞர்களை சமூகமயப்படுத்திய பின்னர் அவர்களது பொருளாதார மற்றும் சமூக நிலைமைகள் தொடர்பான பின்னூட்டல்களை மேற்கொள்ளாமை மற்றும் அதற்காக உரிய பொறிமுறையினை ஸ்தாபிக்காமை போன்றன பயிற்சி முறைமையில் காணப்படும் குறைபாடுகளாகும். அத்துடன் தொழிற்பயிற்சியூடாக சமூகமயப்படுத்தப்படும் கைவினைஞர்கள் தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொள்ளும் நிலைமைகளை கண்டறிவதற்கு எமது பயிற்சி முறைமையிற்கு இயலாமற்போயுள்ளது.

அதற்கிணங்க, தொழிற்பயிற்சியின் மூலம் எதிர்பார்க்கப்படும் ஆற்றல்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தினை கட்டியெழுப்பும் தேசிய செயற்பாடு தொடர்பான பங்களிப்பினை உறுதியாக கண்டறிதல் அத்தியவசியமான விடயமாக விளங்குவதுடன் நாட்டில் நிலவும் தொழிலாளர்களுக்கான கேள்விகளிற்கு பொருத்தமாக கைவினைஞர்கள் தொழிற்பயிற்சி ஊடாக உருவாக்கப்படுகின்றார்களா? அதனால் அரசினால் எதிர்பார்க்கப்படும் இறுதி பெறுபேறுகள் (OUTCOME) பொருளாதாரத்திற்கு கிடைக்கின்றதா? ஆகியவற்றினை கண்டறிதல் அத்தியவசிய விடயமொன்றாகும்.





சமன் விக்கிரமசிங்க - உதவி பணிப்பாளர்
தகவல் தொடர்புகள் பிரிவு

# அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள், 2020

## Level 1 - 4

## Newly Developed NCSs & Curricular

1. Coach (Sports) - NVQ level 04
2. Driver - NVQ level 03
3. Sport Trainer (Physical Fitness) - NVQ level 04
4. Marine Fitter - NVQ level 04
5. Machine Operator (Rice Milling) - NVQ level 04
6. Maternal & Infant Caregiver
7. Crew Member (Pizzeria) - NVQ level 04
8. Computer Hardware & Network Technician - NVQ level 04
9. Embalmer - NVQ level 04
10. Driver Helper - NVQ level 02
11. Electrician Assistant - NVQ level 02
12. Health Care & Supporting Assistant - NVQ level 02
13. Sport, Fitness & Aquatic Center Assistant - NVQ level 02
14. Transport Helper - NVQ level 02
15. Outfit Maker - NVQ level 02
16. Early Childhood Development Centre Assistant - NVQ level 02
17. Communication Assistant - NVQ level 02
18. Vehicle Lube Serviceman - NVQ level 2 & 3
19. Community Health Assistant - NVQ level 2 & 3
20. Assistant Bungalow Keeper - NVQ level 3
21. Disaster Risk Reduction Assistant - NVQ level 3
22. Drug Prevention Assistant - NVQ level 3
23. Fishing Gear Repairer Assistant - NVQ level 3
24. Livestock Assistant - NVQ level 3
25. Environmental Conservation Assistant - NVQ level 3
26. Animal Keeper - NVQ level 3/4
27. Elephant Keeper (Mahout) - NVQ level 3/4
28. Transport Assistant - NVQ level 3
29. Aquarium Keeper - NVQ level 3/4
30. Automative Detailer - NVQ level 4
31. Dancer - NVQ level 3/4
32. Paper Recycling Technician (for persons with disabilities) - NVQ level 3/4

## Level 5 / 6

## Newly Developed NCSs & Curricular

| | | |
|---|---|---|
| 1. | Computer Numerrically Controlled Manufacturing Technology | - NVQ level 5 |
| 2. | Teaching English as a Second Language | - NVQ level 5 |
| 3. | Pharmaceutical Production technology | - NVQ level 5 |
| 4. | Fluid Power Technology (Hydraulic & Pneumatic) | - NVQ level 5 |
| 5. | Plantation Extension Management | - NVQ level 5 |
| 6. | Fabric Technology and Management | - NVQ level 5 |
| 7. | Building Construction Technology | - NVQ level 5/6 |

## Newly Developed NCS

| | | |
|---|---|---|
| 1. | Textile and Apparel Manufacturing Technology | - NVQ level 5 |

## Newly Developed Curriculum

| | | |
|---|---|---|
| 1. | Sea Food Technology | - NVQ level 5/6 |

## Level 1- 4

## Revised NCS & Curricular

| | | |
|---|---|---|
| 1. | Auto mobile Tinker | - NVQ level 3/4 |
| 2. | Receptionist | - NVQ level 4 |
| 3. | Logistic Operations (Store Keeper) | - NVQ level 3 & 4 |
| 4. | First Aider | - NVQ level 4 |
| 5. | Fruit and vegetable Processer | - NVQ level 3 & 4 |
| 6. | Laboratory Assistant | - NVQ level 3 & 4 |
| 7. | Elevator Technician | - NVQ level 3 & 4 |
| 8. | Industrial Electronic Technician | - NVQ level 3 & 4 |
| 9. | Beautician | - NVQ level 2 |
| 10. | Customer Services Assistant (Petroleum) | - NVQ level 2 |
| 11. | Domestic Housekeeping Assistant | - NVQ level 2,3 |
| 12. | Field Assistant (Agriculture) | - NVQ level 3 |
| 13. | Supermarket Customer Service Assistant | - NVQ level 2 |
| 14. | Construction Craftsman (Masonry) | - NVQ level 2 |
| 15. | Plumber Assistant | - NVQ level 2 |
| 16. | Waiter/Steward | - NVQ level 2 |
| 17. | Beautician | - NVQ level 3/4 |
| 18. | Baker/Commis (Pastry and Bakery) | - NVQ level 3/4 |
| 19. | Automobile mechanic | - NVQ level 2/3 |
| 20. | Automobile Technician | - NVQ level 4 |

21. Management Servic Officer - NVQ level 4
22. Management Servic Assistant - NVQ level 3
23. Machinist - NVQ level 3/4

## Revised NCS

1. Industrial Sewing Machine Operator (Team Member –Sewing) - NVQ level 2/3

## Revised Curriculum

1. Pattern Maker - NVQ level 3&4

# Level 5 / 6

## Revised NCS & Curricular

1. Hospitality Management - NVQ level 6
2. Accounting - NVQ level 5/6
3. Plantation Crop Technology - NVQ

# Level 5 / 6

## Revised Curriculum

1. Agricultural Production Technology - NVQ level 5/6

டபில்யூ.ஏ.டபில்யூ.சீ. சந்திராணி பிரேமரத்ன - பணிப்பாளர்
தேசிய தொழிற் தகைமைகள் பிரிவு

### நூலாசிரியர் குழாம்

திருமதி. டபில்யூ. ஏ. டபில்யூ. சந்திராணி பிரேமரத்ன அவர்கள் - பணிப்பாளர்
தேசிய தொழிற் தகைமை பிரிவு

திரு. பீ. ஏ. எம். யூ. கனேபொல அவர்கள் - பணிப்பாளர்
தகவல் முறைமைகள் பிரிவு

திரு. மஞ்சுள விதானபத்திரண அவர்கள் - பதில் பணிப்பாளர்
மக்கள் தொடர்பு பிரிவு

திரு. அனுர வீரக்கோன் அவர்கள் - பிரதி பணிப்பாளர்
தகவல் முறைமைகள் பிரிவு

திரு. சம்மிக குணத்திலக்க அவர்கள் - பதில் பிரதி பணிப்பாளர்
தகவல் முறைமைகள் பிரிவு

செல்வி பாினி விதானகே அவர்கள் - உதவி பணிப்பாளர்
தேசிய தொழிற் தகைமை பிரிவு

திரு. சமன் விக்கிரமசிங்க அவர்கள் - உதவி பணிப்பாளர்
தகவல் முறைமைகள் பிரிவு

திரு. பிரியந்த தர்மசேன அவர்கள் - உதவி பணிப்பாளர்
திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு

கலாநிதி திருமதி தில்ருக்ஷி ஹேரத் அவர்கள் - உதவி பணிப்பாளர்
பயிற்சி நியமங்கள், பாடத்திட்டம் மற்றும் தேசிய தொழிற் தகைமை பிரிவு

திரு.இந்திக சம்பத் அவர்கள் - நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்
நிர்வாக பிரிவு

**கருத்துக்கள் மற்றும் யோசனைகள்**

**Tertiary and Vocational Education Commission**
'Nipunatha Piyasa', 354/2, Elvitigala Mawatha, Colombo 05, Sri Lanka.
Tele : +94(0) 11 760 8000 Fax : +94(0) 11 255 5007
info@tvec.gov.lk, www.tvec.gov.lk